புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 251 | 17-03-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volume 01 | Issue: 251 | 17-03-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## ஹார்முஸ் ஜலசந்தியில் இந்திய கப்பல்களுக்கு நட்பின் அடிப்படையில் ஈரான் அனுமதி: ஜெய்சங்கர்

புதுடெல்லி: மார்ச்.17–

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்திய கப்பல்களை அனுமதித்ததால் ஈரான் பிரதிபலனாக எதையும் பெறவில்லை என்றும்,நட்பின் அடிப்படையிலேயே இது நடந்தது என்றும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் ஃபினான்சியல் டைம்ஸ் (Financial Times) பத்திரிகைக்கு பேட்டி அளித்த ஜெய்சங்கர், ஈரானுடன் இந்தியா நடத்தி வரும் பேச்சுவார்த்தை குறித்தும் அதனால் கிடைத்துள்ள பலன்கள் குறித்தும் விவரித்துள்ளார். இந்தியாவின் இந்த அணுகுமுறை ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்குமா என்ற கேள்விக்கும் அவர் பதில் அளித்துள்ளார்.

ஜெய்சங்கர் தனது பேட்டியில், “உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் 20 சதவீதம் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே நடைபெறுகிறது என்பதால், இந்த பாதை மீண்டும் (பழையபடி) திறக்கப்படுவதற்காக ஈரானுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்த பேச்சுவார்த்தை ஏற்கெனவே சில பலன்களைத் தரத் தொடங்கிவிட்டன.

நாம் பேச்சுவார்த்தை நடத்தாமல் தொடர்பை துண்டித்துக் கொள்வதைவிட, அவர்களுடன் பேசுவதும், புரிந்து கொள்வதும், ஒருங்கிணைந்து செயல்படுவதும் இந்தியாவுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. இதன்மூலம் ஒரு தீர்வைப் பெறுவதே இந்தியாவின் பார்வையில் சிறந்தது. பேச்சுவார்த்தை காரணமாக இந்திய கொடியேற்றிய சில எண்ணெய் கப்பல்கள், ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியாவுக்கு வந்துள்ளன. இன்னும் பல கப்பல்கள் அந்த ஜலசந்தியை கடக்க வேண்டியது உள்ளது.

அனைத்துக் கப்பல்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு முறையான ஏற்பாடு இன்னும் உருவாக்கப்படவில்லை. கப்பல்களின் போக்குவரத்து ஒவ்வொன்றும் தனித்தனியாக பரிசீலிக்கும் நடைமுறையே தற்போது பின்பற்றப்படுகிறது. இது ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றமாக இருந்தாலும், இது தொடர்பான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்திய கப்பல்களை அனுமதித்ததால் ஈரான் பிரதிபலனாக எதையும் பெறவில்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் நீண்ட காலமாக பழகி வந்த வரலாறு இருக்கிறது. அந்த அடிப்படையிலேயே நாங்கள் ஈரானுடன் பேச்சுவார்த்தையை நடத்துகிறோம். இது ஒரு பண்டமாற்று விவகாரம் அல்ல. இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே ஒரு உறவு உள்ளது. மேலும், தற்போது நிலவும் இந்த மோதலை நாங்கள் மிகவும் துரதிருஷ்டவசமான ஒன்றாகவே கருதுகிறோம்.

ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவின் அணுகுமுறையைப் பின்பற்றிச் செயல்பட முடியுமா என்று கேட்கிறீர்கள். வெளிப்படையாகச் சொல்வதாக இருந்தால், ஒவ்வொரு நாட்டின் உறவும் அதன் தனித்துவமான தகுதிகளின் அடிப்படையிலேயே அமைகிறது. எனவே, அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது கடினம். இருப்பினும், இந்தியாவின் அணுகுமுறையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் எனக்கு மகிழ்ச்சியே’’ என தெரிவித்துள்ளார்.

ஈரான் அரசுடன் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நடத்திய தொடர் பேச்சுவார்த்தையின் காரணமாக இந்திய கொடியேற்றிய சிவாலிக், நந்தா தேவி ஆகிய இரண்டு கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாதுகாப்பாக இந்தியா வந்தடைந்தன. 92,712 மெட்ரிக் டன் திரவ பெட்ரோலிய வாயுவை (எல்பிஜி) ஏற்றிக் கொண்டு இந்த கப்பல்கள் இந்தியாவின் முந்த்ரா மற்றும் காண்ட்லா துறைமுகங்களுக்குச் செல்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## வேட்புமனு தாக்கல் நேரம் முதல் பறக்கும் படைக்கு அறிவுரை வரை தேர்தல் முன்னேற்பாடுகள் பற்றி அர்ச்சனா பட்நாயக் விளக்கம்

சென்னை: மார்ச். 17–

சோதனைகளின் போது பொதுமக்களை தொந்தரவு செய்யக் கூடாது என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்திருந்தால் பணத்தை உடனே திருப்பித்தர உத்தரவிட்டுள்ளோம் என தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “மார்ச் 30 முதல் ஏப்.6 வரை பொதுவிடுமுறை நாட்களைத் தவிர மற்ற நாட்களில் காலை 11 மணி முதல் பகல் 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பணம் எடுத்துச் செல்லக் கூடாது. அப்படி எடுத்துச் செல்லப்படும் பணம் எங்கிருந்து பெறப்பட்டது என்பதற்கான ஆவணம் கட்டாயம் தேவை. சோதனைகளின்போது பொதுமக்களை தொந்தரவு செய்யக்கூடாது



என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்திருந்தால் பணத்தை உடனே திருப்பித்தர உத்தரவிட்டுள்ளோம். வாக்களிக்கும் இடத்தில் செல்போன்களுக்கு அனுமதி இல்லை. செல்போன்களை வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பாக வைக்க வசதி செய்து தரப்படும். வாக்குச்சாவடி விவரங்கள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். தமிழகத்தில், தோதலை முன்னிட்டு 2,106 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் முறை பணப் பரிவர்த்தனைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் வந்ததில் இருந்து இதுவரை ரூ.1.26 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பரப்புரை செய்யலாம்; ஆன்லைன் மூலம் மட்டுமே பரப்புரைகளுக்கு அனுமதி கேட்கப்பட வேண்டும்”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




138 மணப்பாறை சட்டமன்ற தொகுதி அனைத்து அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டம், மணப்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அலுவலர், தலைமையில் உதவி தேர்தல் அலுவலர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் திமுக, காங்கிரஸ், பாஜக, கம்யூனிஸ்ட், உள்ளிட்ட அங்கிகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு ஏற்றம் தந்த 1989 தேர்தல்–முதல் களம் 10.

1989ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற்றபோது,சேலம் மாவட்டத்தின் ஒரு சிறிய ஊரிலிருந்து ஒருவர் தேர்தல் களத்தில் குதித்தார்.

அவர் பெயர் எடப்பாடி பழனிசாமி. அப்போது பெரும்பாலானோருக்கு அவர் பெயர் கூடத் தெரியாது. ஆனால் அந்தத் தேர்தலில், எடப்பாடி தொகுதியில் அவருக்கு கிடைத்த வெற்றி, திராவிட அரசியல் வரலாற்றில் மிகவும் எதிர்பாராத ஒரு அத்தியாயத்துக்கான தொடக்கமாக அமைந்து, முதலமைச்சர் பதவியிலும் அவரை அமர வைத்தது.

தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் மக்களை ஈர்க்கும் கவர்ச்சியும், உரத்த பேச்சும், ஆளுமையும்தான் பெரும்பாலும் ஒருவரை தலைவராக உயர்த்தும். ஆனால், எடப்பாடி பழனிசாமிக்கு கிடைத்த உயர்வு, ஒரு வித்தியாசமான எளிமையால் தனித்து நிற்கிறது.

இன்று அதிமுக பொதுச் செயலாளராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள காத்திருக்கும் எடப்பாடி பழனிசாமியின் அரசியல் வாழ்க்கைக்கான தொடக்க புள்ளி, அவரது முதல் தேர்தல் வெற்றியிலிருந்துதான் துவங்கியது.

எடப்பாடி பழனிசாமி சிலுவம்பாளையத்தில் தொடங்கிய அரசியல் வாழ்க்கை

1954ல் சேலம் மாவட்டம், எடப்பாடிக்கு அருகேயுள்ள சிலுவம்பாளையம் கிராமத்தில், விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்த பழனிசாமி, சாதாரண வெல்லமண்டி வியாபாரியாக வாழ்க்கையைத் தொடங்கினார். எடப்பாடி பழனிசாமி

அதிமுகவில் அடிப்படை உறுப்பினர் என்பதிலிருந்து சிலுவம்பாளையம் அதிமுக கிளைச் செயலாளர் பதவிக்கு உயர்ந்தார். தொடர்ந்து ஊராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர், எம்ஜிஆர் மறைவைத் தொடர்ந்து, அதிமுக இரண்டாக உடைந்தபோது, ஜெயலலிதா அணியில் செங்கோட்டையனுடன் இருந்தார். ஒருவகையில் சொல்லப்போனால், செங்கோட்டையன்தான் பழனிசாமியின் அரசியல் தொடக்கத்தை வடிவமைத்தவர்களில் முக்கியமானவர். எடப்பாடி முதல் சேலம் மாவட்டம் வரையிலான அமைப்பு பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்தார் செங்கோட்டையன். அந்தப் பணிகளை எல்லாம் அமைதியாகவும், துல்லியமாகவும், முழுமையாகவும் செய்து முடிக்கும் திறன்தான், பின்னாளில் அவரது அடையாளச் சின்னமாக மாறியது.

கோட்டையாக மாறிய எடப்பாடி தொகுதி

1987ல் எம்ஜிஆர் மறைவுக்குப் பிறகு, அதிமுக ஜெயலலிதா ஆதரவு அணி, ஜானகி அணி என இரண்டாக உடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பமே, பழனிசாமியைத் தேர்தல் அரசியலுக்குள் இழுத்தது. கட்சி பிளவுபட்டபோது அவர் ஜெயலலிதா பக்கமே நின்றார். அந்த விசுவாசத்துக்கு பலனாக, 1989 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி தொகுதிக்கான அதிமுக சீட் அவருக்கே கிடைத்தது.

அதிமுகவில் அடிமட்டத் தொண்டராக, கிளைக்கழகச் செயலாளராக பல ஆண்டுகள் உழைத்த எடப்பாடிக்கு, அந்தத் தேர்தலில் கிடைத்த வெற்றி, சிறிய அளவிலான வாக்கு வித்தியாசத்தில்தான் கிடைத்தது. வெறும் 1,299 வாக்குகள் வித்தியாசத்திலேயே, அவர் திமுக வேட்பாளர் கே.ஆர். நடராஜனை வீழ்த்தினார். இருப்பினும், முதல் முறை போட்டியிட்டு, பெரிதாக அறியப்படாத பின்னணியிலிருந்து வந்த ஒருவருக்கு, அது சாதாரண வெற்றி அல்ல. அதைவிட முக்கியம், எடப்பாடி தொகுதி அன்று முதல், பழனிசாமியின் கோட்டையாக மாறியது.

முதல் வெற்றிக்குப் பிறகு அவர் திரும்பவும் 1991ல் அதே எடப்பாடி தொகுதியில் வென்றார். 1996 தேர்தலின்போது காணப்பட்ட மாநிலம் தழுவிய அதிமுக எதிர்ப்பு அலையில் தோற்றாலும், 2011ல் மிகப் பெரிய வித்தியாசத்துடனும், 2016ல் இன்னும் பெரிய வெற்றியுடனும் திரும்பி வந்தார். அதற்கு அவர் பயன்படுத்தியது உரத்த பிரசாரங்களோ திரைப்பட நட்சத்திரக் கவர்ச்சியோ அல்ல. தொகுதிக்குள்ளேயே தங்கி, மக்களோடு மக்களாக நடத்திய



அமைதியான அரசியல்தான்.

எடப்பாடி பழனிசாமிஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய அமைச்சர்

பிரம்மாண்டமில்லாமல் வாக்குகளைத் திரட்டும் அவரது திறமை, ஜெயலலிதாவின் கண்களில் படத் தொடங்கியது. 2000களின் தொடக்கத்திலேயே மேற்கு மாவட்டங்களின் கட்சி அமைப்பின் ஒருங்கிணைப்புக்கு அவர் நம்பிக்கைக்குரியவராக உருவெடுத்தார். கட்சிக்குள் சத்தமில்லாமல் வேலையை முடிக்கும் திறன் அவருக்கு அமைச்சரவையிலும் இடத்தைப் பெற்றுத் தந்தது. 2001ல் பொதுப்பணித் துறை அமைச்சரானார். அந்தப் பொறுப்பையும் சர்ச்சையோ சத்தமோ இல்லாமல் நிர்வகித்தார். அந்த அமைதியான நம்பகத்தன்மைதான் அவரை ஜெயலலிதாவுக்கு அருகில் நெருக்கமாக்கியது. கட்சி விவகாரங்களைக் கவனிக்கும் ஐவர் குழுவில் ஒருவராகவும் அவர் இடம்பிடித்தார்.

அமைச்சரவையில் அசைக்க முடியாத இடம்

எடப்பாடி பழனிசாமியின் அரசியல் பயணத்தில் அடுத்த பெரிய பாய்ச்சல் 2011 ல் வந்தது. அதிமுக மாபெரும் வெற்றியுடன் ஆட்சிக்கு வந்தபோது, ஜெயலலிதா அவரை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சராக நியமித்தார். அந்தப் பொறுப்பு அவரது அரசியல் பிம்பத்தின் மையமாக மாறியது. எடப்பாடி தொகுதியில் தொடர்ந்து பெற்ற வெற்றிகளும், அவரை ஜெயலலிதாவின் மிகவும் நம்பகமான அமைச்சர்களில் ஒருவராக்கின.

மாவட்ட அளவிலான உத்தி, தேர்தல் திட்டமிடல் போன்றவற்றில் அவர் கையாளும் பொறுப்புகள் படிப்படியாக அதிகரித்தன. 2016ல் அதிமுக மீண்டும் ஆட்சியைப் பிடித்த பின்னர், பொதுப்பணித் துறை உட்பட முக்கிய இலாகாக்களுக்கான அமைச்சராக பொறுப்புகளை ஏற்றபோது, ஜெயலலிதாவின் அமைச்சரவையில் நான்காவது இடம் அவருடையதாக மாறியது. மேலும் மேலிடத்துக்கான ‘ஸ்வீட் பாக்ஸ்’ சப்ளையில், ஒழுங்கான கணக்கு வழக்குகளுடன் மிக நேர்மையாக(?) நடந்துகொண்டார் எனவும், இதில் பிற அமைச்சர்களைக் காட்டிலும் எடப்பாடிக்கு மிக நல்ல பெயர் என்கிற பேச்சும் அப்போது கட்சி மட்டத்தில் நிலவியது. இதுவே அவரை ஜெயலலிதாவின் உள் வட்டத்திற்குள் நிரந்தரமாக இழுத்துச் சென்றது.

எடப்பாடி பழனிசாமிஜெயலலிதாவின் மறைவும் முதலமைச்சர் வாய்ப்பும்

2016 டிசம்பர் 5 அன்று ஜெயலலிதா மறைந்தபோது, அதிமுக முழுக்க குழப்பமும் பிளவும் சூழ்ந்தன. கட்சியின் கட்டுப்பாட்டை ஜெயலலிதாவின் தோழி சசிகலா ஏற்ற நிலையில், சில மாதங்களிலேயே முதலமைச்சராக இருந்த ஓ.பன்னீர் செல்வத்துக்கும் சசிகலா குடும்பத்தினருக்கும் இடையே மோதல் வெடித்தது. அதனைத் தொடர்ந்து, கூவத்தூரில் நடைபெற்ற பரபரப்பான அத்தியாயத்துக்குப் பின்னர்தான் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சரானார்.

சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்பினால் சசிகலா சிறைக்கு செல்லும் சூழல் உருவான நிலையில், அதிமுக எம்.எல்.ஏக்களிடம் பேசி புதிய அதிமுக சட்டசபைத் தலைவராக எடப்பாடி பழனிசாமியை தேர்வு செய்தார் சசிகலா. சொல்லப்போனால், முதலில் இந்தப் பதவிக்கு பரிசீலிக்கப்பட்டவர் செங்கோட்டையன்தான். ஆனால், பின்னர் நடந்த பல அரசியல் ஆட்டங்களை தொடர்ந்து அந்த வாய்ப்பு எடப்பாடிக்குப் போனது. அந்தத் தேர்வு அதிமுக வட்டாரத்திலேயே ஏராளமானோருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

2017 பிப்ரவரி 14 அன்று அவர் முதலமைச்சராக அறிவிக்கப்பட்டார். பிப்ரவரி 18 அன்று, சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் 122 எம்.எல்.ஏக்களின் ஆதரவுடன் வென்றார்.

அதன்பின்னர், ஓ.பன்னீர் செல்வத்தையும் அவரது ஆதரவு எம்.எல்.ஏக்களையும் சமாதானப்படுத்தி, எஞ்சிய நான்கு ஆண்டுக்கால ஆட்சியையும் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்களுக்கு இடையேதான் கொண்டு சென்றார் எடப்பாடி பழனிசாமி. இன்னொருபுறம் அதுவரை அதிமுக கட்சியிலும் அதிமுக ஆட்சியிலும் மறைமுக அதிகார மையமாக கோலோச்சிய சசிகலா குடும்பத்தினரின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவர்களை முற்றிலும் ஓரங்கட்டினார். அடுத்ததாக 2021 தேர்தலுக்குப் பின்னர், தனக்கு அச்சுறுத்தலாக இருந்த ஓ.பன்னீர் செல்வத்தையும் கட்சியிலிருந்து சாமர்த்தியமாக வெளியேற்றி, அதிமுகவை முற்றிலும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டார். இன்றுவரை இந்த இருதரப்பும், மீண்டும் அதிமுகவுக்குள் நுழைய டெல்லி பாஜக மூலம் எவ்வளவோ அழுத்தம் கொடுத்தும், அசைந்து கொடுக்காமல், கட்சியின் தலைமை பீடத்தில் வலுவுடன் அமர்ந்திருக்கிறார் எடப்பாடி.

அந்த வகையில், 1989 தேர்தலில், வெறும் 1,299 வாக்குகள் வித்தியாசத்தில் தொடங்கிய ஒரு சிறிய வெற்றிதான் எடப்பாடி பழனிசாமியை சட்டமன்ற உறுப்பினராக்கியது மட்டுமல்ல, முதலமைச்சராகவும், அதிமுகவின் ஒரே ஆளுமையாகவும் உயர்த்தியது. சிலுவம்பாளையத்து அடிமட்ட அதிமுக தொண்டனுக்கு அன்று திறந்த கதவு இன்று வரை மூடப்படவே இல்லை.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் வருகின்ற 23.4.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் அரசு அலுவலர்களுக்கான தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. உடன் மாட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், ஈரோடு மாநகராட்சிஆணையாளர் அர்பித் ஜெயின், கோபிசெட்டிப்பாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், உதவி ஆட்சியர், செல்வி. காஞ்சன்சௌத்ரி, திட்ட இயக்குனர் (மாவடட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சுந்தராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது), தேனிமொழி (வளர்ச்சி) ரமேஷ்கிருஷ்ணன் (தேர்தல்) மகேஸ்வரி, இணை இயக்குனர் (வேளாண்மை) சிவக்குமார், வட்டாட்சியர் (தேர்தல்) சண்முகசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

# ஆயுத உரிமம் பெற்றுள்ள அனைத்து நபர்களும் தங்களிடம் உள்ள துப்பாக்கி உரிமம் பெற்ற ஆயுதங்களை கட்டாயமாக ஒப்படைக்க வேண்டும் : திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தகவல் :



திருவள்ளூர் மார்ச் 17 :


தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தல்2026 தொடர்பாக, இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல் அட்டவணையை அறிவித்தையடுத்து, தேர்தல் நடத்தை விதி முறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தலை உறுதி செய்யும் நோக்கில், மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணும் பொருட்டு, மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மாவட்டத்தில் ஆயுத உரிமம் பெற்றுள்ள அனைத்து நபர்களும் தங்களிடம் உள்ள துப்பாக்கி உரிமம் பெற்ற ஆயுதங்களை கட்டாயமாக ஒப்படைக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆயுத உரிமம் பெற்றவர்களும் தங்களது ஆயுதங்களை உடனடியாக தங்களது வசிப்பிடத்திற்கு உட்பட்ட அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கப்படும் ஆயுதங்களுக்கு உரிய ரசீது வழங்கப்படும். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, தேர்தல் செயல்முறை நிறைவடையும் வரை ஆயுதங்கள் காவல் துறையின் பாதுகாப்பில் வைக்கப்படும்.

அரசு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் அல்லது சட்டப்படி விலக்கு அளிக்கப்பட்டவர்கள் தவிர, மற்ற அனைவரும் இந்த உத்தரவை கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். உடனடியாக ஆயுதங்களை ஒப்படைக்காதவர்கள் மீது ஆயுதச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பொது மக்கள் அனைவரும் தேர்தல் காலத்தில் அமைதியை பேணியும், சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கவும் நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# சேலத்தில் நகராட்சி பூங்கா இடத்தை முறைகேடாக விற்ற நபர்களால் அதிர்ச்சி.




சேலம். மார்ச். 17–

சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் முத்து.கூலிதொழிலாளியான இவர் தனது மகளுக்கு 7.50 லட்சம் மதிப்புள்ள 432 சதுர அடி நிலத்தை செல்வி ரவிசந்திரன் என்பவரிடம் கடந்த ஆண்டு வாங்கி உள்ளார்.

பத்திர கிரயம் முடிந்த நிலையில் கூட்டு பட்டாவாக உள்ள இடத்தை தனி பட்டாவாக மாற்ற விண்ணப்பித்துள்ளார். இந்நிலையில் நில அளவீடு செய்த அதிகாரிகள் இந்த இடம் ஆவணத்தில் நகராட்சி பூங்கா என வகைப்பாடு செய்யப்பட்டு இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து செல்வி இடம் கேட்ட பொழுது நான் கடந்த 2011ல் கடையன் என்பவரிடம் வாங்கியதாகவும் ஐந்து பேருக்கு பிறகு இந்த இடம் தனக்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அரசு பூங்கா வகைப்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தை தங்களுக்கு போலியாக விற்பனை செய்திருப்பதாகவும் இதற்காக பத்திரப்பதிவும் பெற்ற நிலையில் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

அலுவலகத்தில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் ஆத்தூர் நகர போலீசார் விசாரணை மேற்கொண்டனர். மேலும் இது தொடர்பாக நில அபகரிப்பு பிரிவில் புகார் அளிக்க அறிவுறுத்தி போலீசார் அனுப்பி வைத்தனர். மேலும் போலியாக விற்பனை செய்த நபர்கள் மட்டுமல்லாமல் பத்திர எழுத்தர், பத்திரபதிவு அலுவலர் உள்ளிட்ட நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆத்தூர் நகராட்சி பூங்காவிற்கு சொந்தமான இடத்தை பத்திர பதிவு செய்து கூட்டு பட்டாவுடன் விற்பனை நடைபெற்ற சம்பவம் ஆத்தூர் பகுதியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

# திருப்பூர் வடக்கு தொகுதி வேட்பாளர் அறிவிப்பு!!

திருப்பூர், மார்ச்.17

அகில பாரத இந்து மகா சபா சார்பாக சென்னை பாரதி தெரு பெரம்பூரில் அளவில் ஹிந்து எழுச்சி பொதுக்கூட்டம். மற்றும் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் அகில பாரத இந்து மாத சபாவின் தேசியத் தலைவர் சுவாமி சக்கரபாணி மகாராஜ் அவர்களும் தலைமையில் அகில பாரத இந்து மகா சபாவின் தேசிய துணை தலைவரும் தமிழக தலைவருமான



தா. பாலசுப்பிரமணியன் முன்னிலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் 2026 தமிழகத்தில் நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் முதல் கட்ட110 வேட்பாளர் அறிமுகம் செய்யப்பட்டது. அதில் திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதியின் அகில பாரத இந்து மகா சபாவின் மாநில இளைஞரணி தலைவர் திருப்பூர் மாவட்ட தலைவர் டாக்டர் ஜி.பாலகிருஷ்ணன் என்கின்ற வல்லபை பாலா அவர்களை வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்...

# கொடுத்தபணத்தை கேட்டவர் மீது கொலைவெறி தாக்குதல்

காவல் துறையில் பணியாற்றியவர் செல்வக்குமார். அவரது மறைவிற்கு பிறகு கிடைத்த பணப்பலனைக் கொண்டு

செல்வக்குமாரின் மனைவி ரேக்கா தனது மகனையும், மகளையும் படிக்கவைத்துக்கொண்டு, திருச்சி துவாக்குடி பகுதியில் வாழ்ந்துவருகிறார். அவரிடம் இருந்த ரூ.30 லட்சம் பணத்தை அதிமுக பிரமுகர் எம்.பி.ராஜா என்பவர் வாங்கி ஏமாற்றிவிட்டார்.

இதுகுறித்த புகாரில் அதிமுக பிரமுகர் எம்.பி.ராஜா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், ராஜாவின் மனைவி, "உடனே ஒரு நிலத்தை விற்று பணத்தை திருப்பிக்கொடுக்க ராஜா விடுதலை செய்யப்பட வேண்டும். அதற்கு வழக்கை திரும்ப பெறவேண்டும்" என நயவஞ்சகமாக பேசியுள்ளார். இதனை நம்பி எழுதிவாங்கிக்கொண்டு ரேக்கா வழக்கை திரும்பப்பெற்றார்.

இன்று பணத்தை கேட்க வீடுதேடி சென்றபோது, அதிமுக பிரமுகர் எம்.பி.ராஜாவின் மனைவி நளினி, அம்மா சுமதி, அக்கா கணவர் சந்தோஷ் ஆகியோர் வளவந்தான்கோட்டை பிரிவு ரோட்டில் வைத்து ரேக்கா மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அப்போது அருகில் இருந்தவர்கள் ரேக்காவை மீட்டு துவாக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அரசு மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் மேல்சிகிச்சைக்காக ரேக்கா பெல் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மதுராந்தகம் தொகுதியில் காரில் கொண்டு சென்ற ரூ.15 லட்சம் பிடிபட்டது

மதுராந்தகம்: மார்ச். 17

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட நேத்தபாக்கம் பகுதியில் இன்று காலை தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனையில் ஈடுபட்டனர்

அப்போது அவ்வழியே சென்னையை நோக்கி சென்ற காரை மடக்கி பிடித்து சோதனை செய்தனர். அந்த காருக்குள் உரிய ஆவணங்கள் இல்லாமல் வைத்திருந்த ரூ.15 லட்சம் ரொக்கப் பணம் மற்றும் காரை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதைத் தொடர் ந்து, மதுராந்தகத்தில் உள்ள உதவி தேர்தல் நடத்தும் அலுவலகத்தில் காரில் ரூ.15 லட்சம் ரொக்கப் பணத்தை எடுத்து சென்ற நபரிடம் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தில்லை நகரில் பரிதாபம் , திருச்சி ஓட்டல் ஊழியர் சாக்கடைக்குள் விழுந்து சாவு உடலை கைப்பற்றி போலீசார் விசாரணை

திருச்சி மார்ச் 17

திருச்சி, பாரதி நகரை சேர்ந்தவர் நரசிம்மலு. இவரது மகன் எத்திராஜ் (வயது 42).இவர் திருச்சி தில்லை நகரில் உள்ள ஓட்டல் வந்து பணிபுரிந்து வந்தார்.இன்னும் திருமணம் ஆகவில்லை.இவர் தனது அண்ணன் ஓய்வு பெற்ற வங்கியில் ஊழியர் குருமூர்த்தியுடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார்.நேற்று வேலைக்கு வந்த இவர் தென்னூர் அண்ணா நகர் சாக்கடையில் தவறி விழுந்தார்.இவரை பார்த்த அப்பகுதி பொதுமக்கள் மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர்.ஆனால் பரிசோதித்த டாக்டர்கள் எத்திராஜ் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து அவரது அண்ணன் ஓய்வு பெற்ற வங்கி ஊழியர் குருமூர்த்தி அளித்த புகாரின் பேரில் தில்லை நகர் போலீசார் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சியில் கழிவறைக்குச் சென்ற பள்ளி மாணவியரிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட மர்ம ஆசாமி போலீசார் விசாரணை:

திருச்சி மார்ச் 17

திருச்சி, திருவரங்கம் பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஒரு மாணவி ஆறாம் வகுப்பு படித்து வருகிறார்.அந்த மாணவி இரண்டாவது மாடியில் உள்ள பள்ளி கழிவறைக்கு சென்று விட்டு திரும்பினார்.அப்போது ஒரு மர்ம ஆசாமி மாணவியின் கையைப் பிடித்து இழுத்து சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார்.உடனே இதுகுறித்து மாணவியின் தாயார் அளித்த புகாரின் அடிப்படையில் திருவரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததையடுத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ரத்து : நுழைவு வாயிலில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் மனுக்களை போட நடவடிக்கை



திருவள்ளூர் மார்ச் 17 :

தமிழகத்தில் வருகிற ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதனையடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. இதனால் பிரதி வாரம் திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ரத்து செய்யப்பட்டது.

இதனையடுத்து கோரிக்கை மனுக்களை செலுத்த ஏதுவாக மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவு வாயிலில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கோரிக்கை மக்களை பொதுமக்கள் செலுத்தி விட்டு செல்கின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளிடம் கொடுக்கும் மனுக்கள் மீது எடுப்பதே பெரிய சவாலாக உள்ள நிலையில் பெட்டியில் போடப்படும் மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

# வசிக்க அடுத்தவர் வீடு, செலவுக்கு மற்றவர் பணம், வாழ்க்கைக்கு அடுத்தவர் மனைவி என விசிக பிரமுகர் செயல் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்!!



திருப்பூர் மார்ச்: 17

திருப்பூர் மண்டல விசிக துணை செயலாளராக இருப்பவர் தமிழ்வேந்தன் இவர் மீது 3 பேர் வெவ்வேறு புகார் தெரிவித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர். அதன்படி. கோவை குனியமுத்தூரை சேர்ந்த அகிலாண்டேஸ்வரி என்பவரது கணவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு சொந்தமாக திருப்பூரில் உள்ள 70 சென்ட் நிலம் மற்றும் அதில் உள்ள 3 வீடுகளையும் போலியான நபரை பயன்படுத்தி கிரையம் செய்துள்ளதாகவும் இது தொடர்பாக திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தமிழ்வேந்தனை வெளியேற்ற இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் நீதிமன்ற உத்தரவை மீறி சொத்தை ஆக்கிரமித்து உள்ளதாகவும் இது தொடர்பாக தங்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக அகிலாண்டேஸ்வரி புகார் அளித்தார். அதே போல் பூமலூரை சேர்ந்த ரெங்கசாமி(58) என்பவருக்கு திருமணமாகி 24 ஆண்டுகள் ஆன நிலையில் 23, 21 வயதில் இரண்டு மகன்கள் உள்ளனர். இந்நிலையில் தனது அடமான இடத்தை மீட்பது தொடர்பாக உதவிக்கு என வந்த தமிழ்வேந்தன் தனது மனைவியிடம் பேசி அழைத்துச் சென்று விட்டதாகவும் தனது மனைவியை தன்னுடன் வாழ விடாமல் தடுப்பதாகவும் மேலும் மனைவியை தேடிச் சென்றால் தன்னை கொலை செய்து விடுவதாக மிரட்டுவதாகவும் தனது மனைவியை தன்னுடன் சேர்த்து வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து ரெங்கசாமியும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தார்.

அதே போல் திருப்பூர் சுகுமார் நகர் பகுதியை சேர்ந்த அய்யம்மாள் என்பவரிடம் நிலம் வாங்கி தருவதாக கூறி பல தவணையாக 3 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு நிலம் கிரையம் செய்து தராமலும் பணத்தையும் வழங்காமல் ஏமாற்றி வருவதாகவும் தங்கள் பணத்தை மீட்டு தர வேண்டும் என கோரிக்கை விடுத்து மனு அளித்தனர். திருப்பூர் மண்டல விசிக துணை செயலாளர் தமிழ் வேந்தன் மீது ஒரே நேரத்தில் 3 பேர் புகார் மனு அளித்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக தமிழ்வேந்தனிடம் கேட்ட போது நிலம் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது எனவும் ரெங்கசாமி மனைவி அலமேலுவை தான் திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஏரியில் மது வழியாக தண்ணீர் திறக்க விவசாயி கோரிக்கை



மலையனூர் ஏரிக்கரையில் துர்க்கை அம்மன் கோவில் அருகே பெரிய ஏறி உள்ளது , ஏரி மது தண்ணீர் அதிக அளவில் இருந்தும் மது திறக்காததால் சீப்புண்டி அத்தியந்தல் கீழ் புதுப்பட்டு ஆனந்தாங்கல் வடபாலை ஆகிய ஊர்களுக்கு மேல்மலையனூரில் இருந்து செஞ்சி செல்லும் ஆற்றங்கரையில் நீரோட்டம் இல்லாததால் நெற்பயிர்கள் மற்றும் பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது எனவே மதுவிலிருந்து குறிப்பிட்ட அளவு தண்ணீர் திறந்தால் விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்,

## அரசு கையகப்படுத்திய விடுதலைப் போராட்ட தியாகி தெய்வநாயகத்தின் இடத்தை கண்டுபிடித்து அவரின் வாரிசுகள் இடம் ஒப்படைக்க வேண்டும்

### தேசிய மக்கள் முன்னணி நிறுவனத் தலைவர் சுவாமிநாதன் மாவட்ட ஆட்சியரிடம் மனு



புதுச்சேரி, மார்ச்.17–

அரசுகையகப்படுத்திய விடுதலைப் போராட்ட தியாகி தெய்வநாயகத்தின் இடத்தை கண்டுபிடித்து அவரின் வாரிசுகள் இடம் ஒப்படைக்க வேண்டும் என தேசிய மக்கள் முன்னணி நிறுவனத் தலைவர் சுவாமிநாதன் தலைமையில் நேற்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரி மேட்டுப்பாளையத்தை பூர்வீகமாக கொண்டவர் சுதந்திர போராட்ட தியாகி தெய்வநாயக கவுண்டர். இவரிடம் அரசு 1969ம் ஆண்டு அரசு பள்ளி கட்டுவதற்காக இடம் கேட்டு அணுகியது. புதுச்சேரி வழுதாவூர் பிரதான சாலையில் உள்ள இடத்தை தர தியாகி செய்வநாயக கவுண்டர் தயங்கினாலும் அப்போதைய உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தையால் அரசு அந்த இடத்தை கையகப்படுத்திக் கொண்டது. அந்த இடத்துக்கு பதிலாக தியாகி தெய்வநாயகம் அவர்களுக்கு அரசு சார்பில் ரூ.669.30 பைசா இழப்பீடு மற்றும் மாற்று இடம் கொடுத்து அரசு வழங்கியது.

தற்போது தியாகி தெய்வநாயக கவுண்டர் கொடுத்த இடத்தில் மேட்டுப்பாளையம் அரசு பள்ளி இயங்கியும் வருகிறது. ஆனாலும் அந்த இடத்திற்கான பட்டா இன்றும் அவரது பெயரிலேயே உள்ளது. மேலும் அவருக்கு ஒதுக்கிய பணத்தையும் அவர் எடுக்காமலேயே மறைந்தும் விட்டார்.

அதேசமயம் அவருக்கு சர்வே எண் 105/2ல் 5 ஆயிரம் சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த இடத்தையும் முறையாக அவரிடமோ, அவரது வாரிசிடமோ அரசாங்கம் இதுவரை ஒப்படைக்கவும் இல்லை.

விடுதலைப் போராட்ட தியாகி தெய்வநாயகத்தின் இடத்தை கண்டுபிடித்து அவரின் வாரிசுகள் இடம் ஒப்படைக்க வேண்டும் என இன்று தேசிய மக்கள் முன்னணி நிறுவனத் தலைவர் சுவாமிநாதன் தலைமையில் இன்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அவர்களும் இதற்கு விரைவில் உரிய தீர்வு காணப்படும் என உறுதி அளித்தார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் வருகின்ற 23.4.26 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக (புதிய கட்டிடம்) முதல்தளத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுகுமார், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கலைமாமணி உட்பட பலர் உள்ளனர்.

## அன்னை தெரேசா சமூக சேவை இளைஞர்கள் அறக்கட்டளை புதுச்சேரியில் உதயம்: புதிய நிர்வாகிகள் அறிமுக விழா!



புதுச்சேரி: மார்ச்.17–

தமிழ்நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து மக்கள் பணியாற்றி வரும் அன்னை தெரேசா சமூக சேவை இளைஞர்கள் அறக்கட்டளை,தற்போது புதுச்சேரி மாநிலத்திலும் தனது சேவையைத் தொடங்கியுள்ளது. இது தொடர்பான அறிமுக விழா புதுச்சேரி உழவர்க்கரை சமுதாய நலக்கூடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அறக்கட்டளையின் நிறுவனர் டாக்டர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், புதுச்சேரி மாநிலத்திற்கான புதிய நிர்வாகிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புதுச்சேரி மாநிலத்தின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்,

மாநில செயலாளர்: ஷர்மா ,மாநில பொதுச் செயலாளர்: ஸ்டீபன் (எ) பார்த்திபன்,மாநிலத் துணை பொதுச் செயலாளர்: விஜய பாரதி,மாநில துணைச் செயலாளர்: அசோக்,மாநில ஒருங்கிணைப்பாளர்: சிவா,மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர்: முத்து (எ) ரஞ்சித்,,மாநில அமைப்பாளர்: ரமேஷ் (எ) காத்தவராயன்,மாநில தலைமை நிலை செயலாளர்: விஜய பிரகாஷ்,மாநில இளைஞரணி செயலாளர்: ஜான்,மாநில இளைஞர் அணி பொதுச் செயலாளர்: சதீஷ்குமார்

மாநில இளைஞர் அணி துணை பொதுச் செயலாளர்: ஞானபிரகாசம்,மாநில இளைஞரணி துணைச் செயலாளர்: முருகன்,மாநில இளைஞரணி அமைப்பாளர்: வேல்முருகன்,மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்: ஆதித்யன்,நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் ராஜ்குமார், “அன்னை தெரேசாவின் தியாகமும் அன்பும் தான் இந்த அறக்கட்டளையின் அடிப்படை. இல்லாதவர்களுக்கு நம்மால் முடிந்த உதவியைச் செய்வோம் என்ற நோக்கத்தில், தமிழ்நாட்டைத் தொடர்ந்து தற்போது புதுச்சேரி இளைஞர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இதில் இணைந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது” எனத் தெரிவித்தார்.

விழாவின் இறுதியில், புதிதாகப் பொறுப்பேற்ற நிர்வாகிகள் தங்களுக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய நிறுவனர் டாக்டர் ராஜ்குமார் மற்றும் தமிழ்நாடு மாநிலப் பொறுப்பாளர்களுக்கும் தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## பச்சிளம் குழந்தை முதல் பாட்டி வரை -திமுகவின் இமாலய சாதனை என சேலத்தில் தவெக’வினர் காட்டம்.

சேலம். மார்ச்.17–

சேலம் மாவட்டம் கோரிமேடு அருகே 66 வயது மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மூதாட்டியை கத்தியை காட்டி மிரட்டி கீழே தள்ளி போதையில் இளைஞர்கள் அவரின் பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற சம்பவம் அரங்கேறியுள்ளது. மூதாட்டி கத்தி கூச்சல் போட்டதால் அந்த இளைஞர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். பாதிக்கப்பட்ட மூதாட்டி சேலம் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனிடையே மூதாட்டியிடம் அத்துமீறிய இரண்டு பேரில் ஒருவரான ரவிக்குமார் என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தப்பிச்சென்ற மற்றொரு நபரை பிடிக்க போலீசார் முனைப்பு காட்டியுள்ளனர். விளாத்திகுளத்தின் அலறல் அடங்குமுன் அடுத்த கொடுமை அரங்கேறியுள்ளது என்றும் தமிழகத்தின் அமைதி மாவட்டமாக அறியப்படும் சேலத்தில், 65 வயது மூதாட்டி ஒருவரை இளைஞர்கள் பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் தருகிறது எனவும் தமிழக வெற்றிக் கழகம் தெரிவித்துள்ளது.

தாயுள்ளம் கொண்ட ஒரு மூதாட்டிக்கு நேர்ந்த இந்த இழிவான செயல், ஒட்டுமொத்த தமிழகத்தையே தலைகுனியச் செய்துள்ளது என்றும் இக்கொடூரச் செயலில் ஈடுபட்ட சமூக விரோதிகளின் மனமே திமுக அரசின் ஐந்தாண்டு அடையாளம் எனவும் கூறியுள்ளது. “விடியல் தருவோம்“ என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று முதியோர்களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பற்ற ஒரு இருண்ட சூழலை உருவாக்கியுள்ளனர் என்றும் பட்டப்பகலில் வழிப்பறி, தொடர் கொலைகள் எனத் தொடங்கி, தற்போது 60 வயதைக் கடந்த மூதாட்டிகளைக் கூட விட்டுவைக்காத அளவிற்கு குற்றவாளிகள் துணிச்சலுடன் வலம் வருவது மட்டுமே திமுகவின் சாதனை எனவும் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச் செயல்களின் பின்னணியில் தமிழகத்தில் தடையின்றிப் புழங்கும் போதைப் பொருட்களின் தாக்கம் மிக அதிகமாக உள்ளது என்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தத் தவறியது இந்த அரசின் மிகப்பெரிய நிர்வாகத் தோல்வி எனவும் கூறியது. போதையின் பிடியில் சிக்கியுள்ள இளைஞர்கள் தங்களின் நன்னெறியைத் தொலைத்துவிட்டு, இது போன்ற மிருகத்தனமான செயல்களில் ஈடுபடுவது சமூகச் சீரழிவிற்கு வழிவகுக்கிறது. காவல்துறையை தன்வசம் வைத்துள்ள முதலமைச்சர், விளம்பரங்களில் காட்டும் கவனத்தை மக்களின் பாதுகாப்பில் காட்டத் தவறிவிட்டார் என்றும் தகுந்த பாடத்தை மக்கள் புகட்டுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் கோரிமேடு அருகே 66 வயது மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மூதாட்டியை கத்தியை காட்டி மிரட்டி கீழே தள்ளி போதையில் இளைஞர்கள் அவரின் பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற சம்பவம் அரங்கேறியுள்ளது. மூதாட்டி கத்தி கூச்சல் போட்டதால் அந்த இளைஞர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். பாதிக்கப்பட்ட மூதாட்டி சேலம் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனிடையே மூதாட்டியிடம் அத்துமீறிய இரண்டு பேரில் ஒருவரான ரவிக்குமார் என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு குறித்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கடும் விமர்சனம் ...


திருச்சி, மார்ச். 17–

திருச்சி விமான நிலையத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த 15 நாட்களுக்குள் பல்வேறு கொலைகள் மற்றும் பாலியல் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளது. 6 வயது குழந்தையிலிருந்து 60 வயது முதியவர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது போன்ற தொடர் குற்றச்செயல்கள் அதிகரிப்பு சமூகத்தின் ஒழுக்க சீர்கேட்டிற்கு காரணமாகிறது. குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் மதுபோதையில் உள்ளது கவலைக்குரியது. இதைத் தடுப்பதற்கு அரசுக்கு மட்டுமல்ல

சமூகத்திற்கும் பொறுப்புள்ளது. மேலும்,



சாதி அரசியலாக மாறினால் சமத்துவம் அழியும், மதம் அரசியலாக மாறினால் மனிதம் அழியும், பணம் அரசியலாக மாறினால் பண்பாடு மற்றும் ஒழுக்கம் அழியும் .நல்ல ஒழுக்கம் மற்றும் அறநெறி கொண்ட சமூகத்தை உருவாக்க அனைவரும் உறுதி எடுக்க வேண்டும்.

விஜய்க்கு சிபிஐ சம்மன் அளித்தது குறித்து கேட்ட கேள்விக்கு சீமான் பதில் அளிக்க மறுத்து விட்டார். சசிகலா புதிய கட்சி தொடங்கியுள்ளது பற்றி கேட்டதற்கு அவரை வரவேற்று கிறேன்.

அரசியலில் மாற்றம் வரவேண்டும் என்ற நோக்கத்தில் தான் அனைவரும் கட்சி தொடங்குகிறார்கள். அவர் மாற்றத்தை கொண்டு வர வாழ்த்துதுகிறேன்.

திமுக தனியார் மயத்திற்கு எதிராக போராட்டம் நடத்துவது குறித்து கேட்டதற்கு நாட்டின் பொருளாதார கொள்கையே தனியார் மயத்தை ஏற்றுக் கொண்டது . கல்வி, மருத்துவம், போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகள் ஏற்கனவே தனியார் மயமாகிவிட்டன.

கூட்டணி குறித்து கேள்வி கேட்ட போது, இன்னும் எந்த கூட்டணியும் முடிவாகவில்லை என்றும், தங்கள் கட்சி முன் கூட்டியே மக்களிடம் சென்று அரசியல் நிலைப்பாடுகளை விளக்கி வருவதாகவும் தெரிவித்தார். பெரிய பொருளாதார ஆதாரம் இல்லாததால் மக்களை நேரில் சந்தித்து ஆதரவு பெற முயற்சித்து வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழர் நலனுக்காக நடத்தப்படும் போராட்டங்கள் மக்களிடம் சென்று சேர வேண்டும் , அதை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு இருப்பதாகவும் ழிகுறிப்பிட்டார்.

ஈரான் ரூ இஸ்ரேல் போர் போன்ற சர்வதேச மோதல்களில் பல நாடுகள் தலையிட்டு தீர்வு காண வேண்டும். போர் எப்போதும் மனித உயிர்களுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும்.

அதே நேரத்தில், தமிழக அரசியல் போட்டி குறித்து பேசும்போது, நாம் தமிழர் கட்சி முன்வைக்கும் அரசியல் மக்களுக்கு தேவையா? இல்லையா ?என்பதே முக்கியம். மற்றவர்கள் அரசியலுக்கு வருவது எங்கள் கட்சியை பாதிக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

கல்வி, மருத்துவம், குடிநீர், சாலை வசதி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய அடிப்படை தேவைகள் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே தங்கள் அரசியல் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதிமுக, திமுக போட்டி போட்டுக் கொண்டு பணம் வழங்குவது குறித்த கேள்விக்கு, நானும் உங்களுக்கு 50000 ரூபாய் தருவேன் எனக்கூறி அந்த இடத்தையே கலகலப்பாக்கினார்.

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மற்ற இதர குறைதீர் கூட்டங்கள், ஏனைய சிறப்பு முகாம்கள் நிறுத்திவைப்பு

### மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் மார்ச் 17 :

இந்திய தேர்தல் ஆணையத்தினால் 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளதால் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிரதி வாரம் திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மற்ற இதர குறைதீர் கூட்டங்கள், ஏனைய சிறப்பு முகாம்கள் போன்றவை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தங்களுக்கு அவசரமான கோரிக்கை ஏதும் இருப்பின் அதுகுறித்த மனுக்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உட்பட அனைத்து அரசு அலுவலகங்களின் முன்புற வாசலில் வைக்கப்பட்டுள்ள மனுக்கள் பெறும் பெட்டியில் செலுத்துமாறு திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

## கிருஷ்ணகிரி பெல்லாரம்பள்ளி ஊராட்சியில் குப்பை , கோழி கழிவுகளால் நோய் தொற்று ஏற்படும் அபாயம்! அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?





கிருஷ்ணகிரி பெல்லாரம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட சின்னபெல்லாரம்பள்ளி கிராமத்தில் உள்ள நீர் நிலை காணாறு முற்றிலும் குப்பைகள் மற்றும் கோழி இறைச்சி கழிவுகள் கொட்டி நீர் நிலை காட்டாறு துர்நாற்றம் வீசுகிறது . இதனால் அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகளும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள் மேலும் நோய் தொற்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது . இது குறித்து கிருஷ்ணகிரி வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு தகவல் கொடுத்து பல நாட்கள் ஆகியும் இதுநாள் வரை சரிசெய்ய படவில்லை என அப்பகுதி பொதுமக்கள் கூறுகிறார்கள் எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகம் உடனடியாக குப்பை கோழி இறைச்சி கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆலம் ஸ்டெப்ஸ்டோன் சீனியர் ஹெவன் புரமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்’நாட்டின் முதல் ‘3இன்1’ முதியோர் சொகுசு குடியிருப்புத் திட்டமான ‘ஸ்ரீனிவாசா பாம்ஸ்’ஐ உருவாக்கியுள்ளது..




கோவை மார்ச் :17

தென்னிந்தியாவின் மிக நம்பிக்கைக்குரிய முதியோர் குடியிருப்பு உருவாக்குனர்களில் ஒருவராகிய ‘ஆலம் ஸ்டெப்ஸ்டோன் சீனியர் ஹெவன் புரமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்’ நாட்டின் முதல் ‘3இன்1’ முதியோர் சொகுசு குடியிருப்புத் திட்டமான ‘ஸ்ரீனிவாசா பாம்ஸ்’ (Srinivasa Palms)ஐ உருவாக்கியுள்ளது இதன் இரண்டாம் கட்ட விரிவாக்கத் திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. கோயம்புத்தூர், ஃபேர்ஃபீல்ட் பை மேரியட் (Fairfield by Marriott) ஹோட்டலில் மார்ச் 13 முதல் 15 வரை நடைபெறும் இந்நிறுவனத்தின் கண்காட்சியில் வீடு வாங்குவோருக்கு, பத்திரப் பதிவு இலவசமாக செய்து தரப்படும். ஒரு குடியிருப்பின் விலை ரூ. 37 லட்சத்திலிருந்து தொடங்குகிறது.

பொள்ளாச்சி அருகில்,மிக அமைதியான சூழலில், 1.18 ஏக்கர் பரப்பளவில் பசுமையான தென்னந் தோப்புகளுக்கு இடையே இக்குடியிருப்புத் திட்டம் அமைந்துள்ளது. கம்பீரமான மேற்குத் தொடர்ச்சி மலைகளின் எழில்மிகு காட்சிகளுடன் 160 குடியிருப்புகள் இதில் உருவாக்கப்பட் டுள்ளன.

நிகழ்ச்சியில் பேசிய இந்நிறுவனத்தின் நிறுவனரும், மேலாண் இயக்குநருமான திரு. மோதிஷ் குமார்,”ரியல் எஸ்டேட் துறையில் 22 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டனர்.

இந்தத் தொடக்க விழாவில் சென்னையைச் சேர்ந்த டாக்டர் T. மீனலோச்சினி (DGO),சுற்றுச்சூழல் ஆர்வலர் திருமதி உமா பாஸ்கர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஓய்வுபெற்ற அதிகாரி எம். முத்துக்குமாரசாமி மற்றும் வெங்கடேஸ்வரா தேங்காய் உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் .அறிவொளி ஆர். முத்துசாமி உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்ற சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர்!!



சென்னை: மார்ச்.17–
டி20 உலக கோப்பை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர். விடாமுயற்சி, ஒழுக்கம், தன்னம்பிக்கையுடன் விளையாடி வெற்றி பெற்றது குறித்து கலந்துரையாடினேன். மேலும் பல வெற்றிகளை குவித்து சாதனை படைக்க வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தருக்கு முதலமைச்சர் வாழ்த்து தெரிவித்துள்ளார்

இந்த நிலையில் இந்திய அணியில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் வாஷிங்டன் சுந்தர் மற்றும் வருண் சக்கரவர்த்தி இருவரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இதுதொடர்பான புகைப்படங்களை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தைச் சேர்ந்த நம்முடைய "ஸ்பின் ட்வின்ஸ்" வாஷிங்டன் சுந்தர் மற்றும் வருண் சக்கரவர்த்தியுடனான மறக்க முடியாத தருணங்கள். இந்த சந்திப்பின்போது உறுதி, விடாமுயற்சி, கட்டுப்பாடு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றால் செதுக்கப்பட்ட அவர்களின் பயணத்தைப் பற்றி, அவர்களுடன் ஒரு அற்புதமான கலந்துரையாடலை மேற்கொண்டேன். வாஷிங்டன் சுந்தர், வருண் சக்கரவர்த்தி ஆகியோருக்கு, இனிவரும் காலங்களில் மேலும் பல வெற்றியைத் தேடித்தரும் பந்துவீச்சுத் தருணங்களும், பெருமைமிக்க தருணங்களும் அமைய வாழ்த்துகிறேன் என தெரிவித்தார்.

# காரமடை அருகே மூன்று வருவாய் துறை வட்டத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பித்த நீலகிரி எம்.பி. ஆ.இராசா !



கோவை மார்ச்:17
கோவை மாவட்டம் காரமடை அருகே டீச்சர்ஸ் காலனி பகுதியில் மேட்டுப்பாளையம், அன்னூர், கோவை வடக்கு ஆகிய வருவாய்த்துறை வட்டத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் கோவை வடக்கு மாவட்ட கோட்டாட்சியர் வினோத்குமார் வரவேற்புரை ஆற்றினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமார் தலைமை தாங்கினார்.

காரமடை நகர மன்ற தலைவர்கள் உஷா வெங்கடேஷ், கூடலூர் அ.அறிவரசு ஆகியோர் முன்னிலை வகித்தார்.

விழாவில் பல்வேறு அரசுத்துறை சார்ந்த அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாண சுந்தரம், முன்னாள் எம்.எல்.ஏ.பா. அருண்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம், காரமடை நகர செயலாளர் கே.ஜி.குரு பிரசாத், ஒன்றிய செயலாளர்கள் சு.சுரேந்திரன், எஸ்.எம்.டி.கல்யாண சுந்தரம், சிறுமுகை பேரூராட்சி உதயகுமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பிரஸ் குமார் மற்றும் பல்வேறு கட்சி நிர்வாகிகள், பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைத்து பயனாளி களுக்கும் கூடலூர் நகரத் தலைவர் ஏற்பாட்டில் மதிய உணவு வழங்கப்பட்டது.

# அனைத்து உலக முதலியார் பிள்ளைமார் சங்கம் சார்பில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்



புதுச்சேரி, மார்ச். 17–
பாண்டிச்சேரி வெங்கட்டா நகர் தமிழ்ச்சங்கம் வளாகத்தில் அனைத்து உலக முதலியார் பிள்ளைமார் சங்கம் சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் பொதுமக்களுக்கு பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் வைத்தியலிங்கம், நாராயணசாமி கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டார். மேலும் என்பிஆர் மருத்துவமனையின் முதுநிலை மருத்துவர் டாக்டர் வித்யா மற்றும் பல்வேறு துறை மருத்துவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் ஸ்ரீதர் பிள்ளை, செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மகளிர் அணி தலைவர் சித்ராதேவி மற்றும் துணைச் செயலாளர்கள் மதிவாணன், சிவகுமார், திருவேங்கடம், ராஜா, தணிகைவேல், லாஸ்பேட் திருவேங்கடம், எஸ்.பி. ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டு பயனடைந்தனர்.

# இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து, பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகள்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் ஆய்வு



திருவள்ளூர் மார்ச் 17 :
இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பேசினார்.

இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதற்கான அட்டவணையை அறிவித்துள்ளது. அதன்படி முதல் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும் இன்றிலிருந்து தேர்தல் நடத்தை விதிமுறைகளை அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து நகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் உள்ளாட்சிகளின் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்களும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்கள்

மாலை 6 மணி முதல் பறக்கும் படை மற்றும் நிலைகுழுக்கள் இந்த இரண்டு படைகளும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்கள் சோதனையை தொடங்கி இருக்கிறார்கள் முக்கியமாக இந்த பட்டறை பெருமந்தூர் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டு திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் (ம) திருவள்ளூர் தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமையில் சட்டமன்ற தொகுதி முழுவதும் உள்ள பறக்கும் படைகள் அவர்களுக்கான பணிகளை தொடங்கி உள்ளார்கள். அதன் ஒரு படை பட்டறைபெருமந்தூர் சுங்கச்சாவடி அருகில் சோதனைகளை மேற்கொண்டு வருகிறார்.

அதனை பார்வையிட்டோம் மேலும் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் ஒரு படைகள் 8 மணி நேரத்திற்கு ஒரு குழுப்படை என்ற விகிதம் ஒரு நாட்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று சுழற்சிகளில் இப்படைகள் உள்ள அலுவலர்கள் வந்து தொடங்கப்பட்டுவ்ள்ளது. அது மட்டும் இல்லாமல் ஒவ்வொரு இடங்கள்ல இருக்கிற அரசு விளம்பரங்கள், அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் , அது தொடர்பாக இருக்கிற புகைப்படங்கள் இது எல்லாத்தையுமே அகற்றும் பணிகள்ல ஈடுபட்டுட்டு இருக்கிறோம்.

மாவட்ட நிர்வாகத்தின் அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பணிகளை விரைவாக மேற்கொண்டு வருகிறார்கள். எந்த இடங்களில் பொதுமக்களிடமும், அரசியல் கட்சிகளிடமும் எவ்வித முன்அனுமதி இல்லாமல் இனி கூட்டங்களோ பொது இடங்களில் கொடிக்கம்புகள் நடுதல் பொது இடங்களில் மற்ற விளம்பரங்கள் இது எதையுமே வந்து தேர்தல் நடத்தும் அலுவலகத்தில் உள்ள அலுவலகத்தில் அனுமதி வாங்காமல் செய்யக்கூடாது அப்படின்னு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் 50 ஆயிரத்துக்கும் அதிகமாக பணம் எடுத்து சென்றால் அதற்கு உரிய ரசீதை அவர்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் விழிப்புணர்வு உங்கள் வாயிலாக கொடுக்கிறோம் ஏன்னா அதுக்கு மேல எடுத்துட்டு போறதுக்கு தேர்தல் ஆணையம் வந்து அனுமதிக்கிறது இல்ல அதுக்கு மேல எடுத்துட்டு போலாம் எடுத்துட்டு போனால் உரிய ஆவணம், அதன் மூலதனம் என்ன அப்படிங்கற விபரம் கரியாக சொல்லணும் பொதுமக்களுக்கு எந்த சிரமமும் இன்றி தேர்தல் நடத்தை விதிகள் வந்து சிறப்பாக திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறுவதற்கான அனைத்து பணிகளையும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மேற்கொள்வார்கள் என மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் கூறினார்.

முன்னதாக இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தியதை தொடர்ந்து, அதனை கடைப்பிடிப்பது தொடர்பாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் 10 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ. ஸ்ரீராம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், துணை ஆட்சியர் (பயிற்சி) சண்முக ப்ரீத்தா, அலுவலக மேலாளர் (நீதியியல்) செல்வம், வட்டாட்சியர் சிவகுமார், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.ரவிச்சந்திரன், திருவள்ளூர் வட்டாட்சியர் பாலாஜி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 20 ஆண்டுகாலமாக இருட்டில் வாழும் ஈரோடு மேற்குத் தொகுதி ஆர். என். புதூர் பகுதி பொதுமக்கள்... ஆட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் அடையாள அட்டையை வீசி எறிந்து தேர்தல் புறக்கணிப்பு என அறிவிப்பு..





ஈரோடு. மார்ச். 17
ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 20 ஆண்டு காலமாக தங்களுடைய வீடுகளுக்கு மின்சார இணைப்பு தரப்பட வில்லை என்றும் குடிநீர் வசதிகள் இல்லை என்றும் குற்றம் சாட்டி அப்பகுதி பொதுமக்கள் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்து, வாக்காளர் அடையாள அட்டைகளை ஈரோடு ஆட்சியர் அலுவலகம் முன்பாக தரையில் தூக்கி எறிந்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 8 சட்டமன்ற தொகுதிகள் இருக்கும் நிலையில், ஈரோடு தெற்கு மாவட்ட திமுக செயலாளர், அமைச்சர் சு. முத்துசாமியின் தொகுதியான ஆர். என் புதூர் பகுதியைச் சேர்ந்த சூரியம்பாளையம் கிராமம் புல எண் 168 ல் வசிக்கக்கூடிய பட்டியல் என மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இதுவரை கடந்த 20 ஆண்டு காலமாக அந்த நிலத்திற்குரிய பட்டா வழங்கப்படாமல் இருப்பதாகவும், பட்டா இல்லாத காரணத்தினால் மின்வாரியம் சம்பந்தப்பட்ட அந்த பகுதிக்கு மின் இணைப்பு வழங்காமல் இருப்பதாகவும், மேலும் இதன் காரணமாக குடிநீர் இணைப்பு இல்லாமலும் அப்பகுதி மக்கள் கடந்த 20 ஆண்டுகாலமாக மிகவும் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் குற்றச்சாட்டு சொல்கின்றனர்.

மேலும் ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் அந்த பகுதிக்கு வந்து இங்குள்ள குறைகளை உடனடியாக நாங்கள் தீர்த்து வைக்கிறோம் என்று சொல்லி எங்களுடைய ஓட்டுக்களை வாங்கி செல்கிறார்களோ தவிர, அதன் பிறகு இந்த பக்கம் எட்டிப் பார்ப்பது கூட இல்லை என்ற குற்றச்சாட்டையும் அவர்கள் பலமாக வைத்துள்ளனர்.

மேலும் சம்பந்தப்பட்ட அந்தப் பகுதி ஈரோடு மேற்கு தொகுதியில் வருகிறது. மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக உள்ளவர், அமைச்சர் முத்துசாமி. இவரிடமும் பல மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளிடமும் கடந்த சுமார் 20 ஆண்டு காலமாக இந்த முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் இதுவரை அதிகாரிகளோ அரசியல் கட்சித் தலைவர்களோ எங்களுக்கு எந்த ஒரு உதவியும், எங்களது நியாயமான கோரிக்கையையும் ஏற்று அதற்குரிய தீர்வை இந்த நாள் வரை தரவில்லை. என்று ஆட்சியர் அலுவலகத்தில் முறையிட வந்திருந்த, ஈரோடு மேற்கு தொகுதி ஆர் என் புதூர் அன்னை தெரேசா காலனி பொது மக்கள் குற்றம் சாட்டினர்.

தொடர்ந்து அவர்கள் செய்தியாளர்களை சந்தித்து இதுகுறித்து கண்ணீர் மல்க தெரிவித்ததோடு, கடந்த 20 ஆண்டுகாலமாக மின் இணைப்பு இல்லாமல் லாந்தர் வெளிச்சத்தில் வாழ்ந்து வருகிறோம் என லாந்தர் மற்றும் சிம்னி விளக்குகளை எடுத்து செய்தியாளர்களும் காட்டினர்.

அதன் பிறகு கோபமடைந்த அந்த பொதுமக்கள் இந்தத் தேர்தலை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று கூறி தங்கள் கையில் வைத்திருந்த அவர்களது வாக்காளர் அடையாள அட்டையை ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தூக்கி எறிந்தனர்.

இந்த சம்பவம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சற்று நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# தேர்தல் நன்னடத்தை விதி அமுல். பெட்டியில் போடப்பட்ட மனு.



தமிழக சட்டமன்ற பொது தேர்தல் நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த திங்கட்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற இருந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறாத நிலையில், இதனை அறியாத பொதுமக்கள் மனு கொடுக்க வந்திருந்த நிலையில், ஈரோடு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த பெட்டியில் தங்களின் கோரிக்கை மனுக்களை பொதுமக்கள் போட்டு விட்டு சென்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421